*கவனிக்க.-2020.10.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2197 - 2020 ඔක්තෝබර් මස 09 වැනි සිකුරාදා - 2020.10.09**

*2197 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1401 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1404 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1400 | ஏல விற்பனைகள் | 1406 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1399 - B 82066 - 405 (2020/ 10)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் -யாழ்ப்பாணம்

## நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை

*யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பின்வரும் பொருட்கள் 2020.11.07 ஆந் திகதி இந் நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து காலை 9.30. மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

*2. எவரேனும் ஒருவர் இங்கு குறிப்பிட்டுள்ள ஏதாவது பொருட்களை உரிமை கோருமிடத்து அவர் விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.*

*3. பொது மக்கள், மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிடலாம்.*

*4. ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏலவிற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.*

*5. விற்கப்பட்ட பொருட்களுக்குப் பணத்தை உடன் செலுத்தி பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவில் இருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*ஏ. பீற்றர் போல்,*
*நீதிவான்.*

*நீதிவான் நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

### ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்

| *தொ. இல.* | *வழக்கு இல.* | *வாகன இல.* | *அடிச்சட்ட இல.* | *இயந்திர இல.* |
|---|---|---|---|---|
| 1 | MC/2723/S/18 | NPHG-2455 மோட்டார் சைக்கிள் | 03D14F00482 | 03D13EO1889 |
| 2 | 36495 | NPYI-6291 முச்சக்கர வண்டி | MD6M 14PKB4A14468 | OK4AB 1030494 |
| 3 | MC/1734/F/18 | NPPS-8216 மகேந்திர கெப் | MAIZNZGGACIB19911 | GGCI85223 |
| 4 | 24136 | EPMT-5817 மோட்டார் சைக்கிள் | MD625LF4351N 13520 | OF4N51154510 |
| 5 | 38588 | NPVT-9578 மோட்டார் சைக்கிள் | MD2DHDHZZTCC 50362 | DHGBTC50957 |
| 6 | AR/215/17 | NPVA-6062 மோட்டார் சைக்கிள் | MD2DHDJZZRCL98548 | DJGBRL17386 |
| 7 | 33614 | NPVA-7344 மோட்டார் சைக்கிள் | MDZDHDKZZSC-M44703 | DKGBSM40382 |
| 8 | AR/44/17 | NPXP5156 மோட்டார் சைக்கிள் | MBLJF16EDCGD 11930 | OF16EBCGD-11610 |
| 9 | 31139 | NPYL-1791 முச்சக்கர வண்டி | MA1LE2FHSB3D61954 | R1D2942872 |
| 10 | AR/41/17 | WPUJ-6523 மோட்டார் சைக்கிள் | உதிரிப்பாகம் | - |

*10-633*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் முன்னைய பெயர்: ஆஷா செக்கியூரிடீஸ் லிமிடெட்
கம்பனி இல.: பீ பி 405
கம்பனியின் புதிய பெயர்: ஆஷா செக்கியூரிடீஸ் (பிரைவேட்) லிமிடெட்
பதிவு முகவரி: இல.60, 5 ஆவது ஒழுங்கை, கொழும்பு 3

கோப்பரேட் அட்வைசரி
சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்
கம்பனிச் செயலாளர்கள்.

10- 222

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி யொன்றை கூட்டிணைத்தல்.-

கம்பனியின் பெயர் : சன்-ரே கெம்பஸ் என்ட் கொலேஜ் ஒஃப் இன்டர்நெஷனல் ஸ்டடீஸ் (பீவீஉ) எல்டீடி
கம்பனியின் இலக்கம்: பீவீ 00227298
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.09.11
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி: ராஜபக்ஷ வீதி, தெஹெமிபுர, பெரேகம, அம்பலந்தொட்ட

சட்டத்தரணி,
கே.ஏ.எம். எச்.கொடிதுவக்கு,
கம்பனிச் செயலாளர்.

10-224

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகிறது.-

கம்பனியின் பெயர் : ஹெஷியா (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 122645
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2017.05.26
பதிவு முகவரி: இல. 11, மாமடல, அம்பலந்தொட்டை

கம்பனிச் செயலாளர்கள்.

10-229

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகிறது.-

கம்பனியின் பெயர் : நில்மினி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
பதிவு இல.: பீவீ 00210114
பதிவு செய்த திகதி: 2019.03.22
முகவரி: இல. 354, கொழும்பு வீதி, ஈரியகம, பேராதெனிய

பணிப்பாளர்.

10-262

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகிறது.-

கம்பனியின் பெயர் : கோல்டன் புரொப்பர்டி வென்ச்சர்ஸ் (பீவீஉ) எல்டீடி
பதிவுத் திகதி: 2019.06.18
பதிவிலக்கம்: பீவீ 00212725
பதிவு முகவரி: 271/8, சபுமல் பிளேஸ், நிவந்தம, ஜா-எல

கம்பனிச் செயலாளர்கள்.

10-272

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) இற்கு அமைவாக கம்பனி ஒன்றின் கூறப்பட்ட மூலதனம் குறைக்கப்படுவது தொடர்பாக பின்வரும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.-

நிறுவனத்தின் பெயர் : பீச் எஸ்கேப் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம்: பீவீ 85431
பதிவு செய்யப்பட்ட முகவரி: செக்றிடேறியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டட்,

கம்பனிச் செயலாளர்கள்,
இல.10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 5.

குறைக்கப்படுவதற்கு முன்பு
கூறப்பட்ட மூலதனம் : ரூபா 10,891,000

குறைக்கப்பட்ட பின்பு
கூறப்பட்ட மூலதனம் : ரூபா 1,000
குறைக்கப்பட்ட தொகை : ரூபா 10,890,000

செக்றிடேரியல் ஹவுஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல.10,
ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 05.

10-322

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி 2019.05.21 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : பெட்டாஹ் எசென்ஸ் (பீவீஎ) எல்ஏடி
பதிவிலக்கம்: பீவீ 00211872
பதிவு முகவரி : 45, டாம் வீதி, கொழும்பு 12

10- 368

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : இஷட் ரொஸ் (பீவீஎ) எல்ஏடி
பதிவு முகவரி : ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
பதிவிலக்கம்: பீவீ 00221490
பதிவுத் திகதி: 2020.03.21

கம்பனிச் செயலாளர்.

10-401

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஏ.எம்.என்.டிரேட் நெட் (பீவீஎ) எல்ஏடி
பதிவு முகவரி : இல. 14, 2 ஆம் குறுக்குத் தெரு, உதயநகர், கிளிநொச்சி
பதிவிலக்கம்: பீவீ 00221274
பதிவுத் திகதி: 2020.03.13

கம்பனிச் செயலாளர்.

10-402

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது 2018.11.02ஆந் திகதியிடப்பட்டு 297 ஆம் இலக்கத்தில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு W.A. அஷான் இந்திக முகதாவில் நிறைவேற்றப்பட்ட இல. 456/D/2 , கெசெல்வத்தை, கோன ஹேன, கடவத்தை என்னும் முகவரியைச் சேர்ந்த கஸ்தூரி ஆராச்சிலாகே சரத் பிரேமசந்ர (தே.அ.அ.இல. 671540387V) என்பவரின் பெயரில் மட்டுவாகல, கிரயல்ல, இரத்தினபுரி என்னும் முகவரியைச் சேர்ந்த ரனசிங்க முதியன்சலாகே சிந்தக ரனசிங்க ( தே.அ.அ.இல. 770353742V) ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரம் இன்று முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது. இன்று முதல் அற்றோணித் தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

ரனசிங்க முதியன்சலாகே சிந்தக ரனசிங்க.

10- 217

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கடவத்தை தபால், கோனஹேன வீதி, ரம்முதுகல வத்த, இல. 509/ C/2 எனும் முகவரியை உடைய வெலிவிட்ட வித்தானேலாகே சாம்சன் கல்யாணி பிரேரா வீரவர்தன (தே.அ.அ.இல. 195123003285) ஆகிய நான், எனது அற்றோணி அதிகாரத்தை, குருநாகல் தபால், அஸ்வெத்தும, அலுவிஹாரவத்த, இல. 146/18/1 எனும் முகவரியில் வசிக்கும் லேகம் ராலலாகே அசேல பண்டார அபேரத்ன (தே.அ.அ.இல. 691264890V) என்பவருக்கு இல. 1188 மற்றும் 2020.07.07

ஆந் திகதி பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். சமரகோன் பண்டா என்பவர் முன்னிலையில் கையளிக்கப்பட்டது. இவ் அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கின்றேன். இவ் அற்றோணித் தத்துவத்தின் மூலம் அற்றோணி அதிகாரம் பெற்றவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைக்கும் நான் பொறுப்பல்ல, என்பதையும் மேலும் தெரிவிக்கின்றேன்.

வெலிவிட்ட வித்தானேலாகே
சாம்சன் கல்யாணி பிரேரா
வீரவர்தன

10- 430

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெஹிவளை, பியரதனாராம வீதி, இல. 12, (தற்போது No. 1/19, Adelaide Street, Murruunbeen VIC 3163 Australia) எனும் முகவரியில் வசிக்கும் ஷியாமினீ வஜிரப்பிரபா விக்ரமரத்ன கன்கந்த (வெளிநாட்டு கடவுச் சீட்டு இல. 6158302) ஆகிய நான், கண்டி, குருதெனிய, இலுக்மோதர இல. 294 எனும் முகவரியில் வசிக்கும் மாலதீபதிரென்னெஹெலாகே சிந்ரா பெரேரா கன்கந்த (தே.அ.அ.இல. 545563754V) என்பவருக்கு, மது வர்ணகுலசூரிய Barrister & Solicitor என்பவரால் 2020.09.01ஆந் திகதிய மற்றும் பிரசித்த நொத்தாரிசு எஸ். ஏ.ரீ. எம். சூரியஆரச்சி என்பவரால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அற்றோணி உத்தரவுப் பத்திரப் புத்தகத்தில் 314 ஆம் பிரிவு 124 ஆவது பத்திரத்தில் இலக்கம், நாளேட்டு இலக்கம் 9854 இன் கீழ் 2020.09.15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட அற்றோணித்தத்துவத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக மற்றும் அற்றோணித் தத்துவக்காரரால் இன்று முதல் மேற்கொள்ளுப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவிக்கின்றேன்.

ஷியாமினீ வஜிரப்பிரபா விக்ரமரத்ன
கன்கந்த.

10- 726

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ருக்கஹவில, கம்புராகள்ள, அம்பகஹ வத்த, இல. 397 எனும் முகவரியில் வசிக்கும் சஹன் சாமர ஜயசிங்ஹ (தே.அ.அ.இல. 822502660V) ஆகிய நான், களகெடிஹேன, திமுது மாவத்தை, இல. 63/65 எனும் முகவரியில் வசிக்கும் கனுகள ஆரச்சிகே சரத்சந்திர கனுகள (தே.அ.அ.இல. 631381561V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஷாரிகா ஜயரத்ன என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5940 ஆம் இலக்க முடைய 2017.01.21 ஆந் திகதிய மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அற்றோணி உத்தரவுப் பத்திரப் புத்தகத்தில் 192 ஆம் பிரிவு 12 ஆவது பத்திரத்தில் இலக்கம், நாளேட்டு இலக்கம் 3616 இன் கீழ் 2017.03.07 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக மற்றும் அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவிக்கின்றேன்.

சஹன் சாமர ஜயசங்ஹ.

10- 724

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கட்டுனேரிய, இஹல கட்டுனேரிய, இல. 246A எனும் முகவரியைச் சேர்ந்த லியனகே அமாலி லசந்தி பெரேரா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு டீ. லால் விமலரத்ன என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 212 மற்றும் 2018.01.22 ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் வத்தளை, குடா ஏதண்ட வீதி, இல. 58 எனும் முகவரியச் சேர்ந்த கிரிந்த லியனகே கயாநாத் மனுசங்க (தே.அ.அ.இல. 802373430V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இது முதல் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இதன் பின்னர் எனது சார்பாப குறித்த அற்றோணித் தத்துவகாரரால் நிகழ்த்தப்பட்ட எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

லியனகே அமாலி லசந்தி பெரேரா .

10- 723

# அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைக் குத்தகை விற்பனை-2021

01.மீண்டும் குத்தகைக்கு வழங்கல் 2021ஆந் திகதிக்குரிய வகையில் 2020.09.18 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அம்பகமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் நடாத்தப்பட்ட வெளிநாட்டு குடிபான தவறணைகளை குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கையின் போது கேள்வி அறிவித்தலானது திருப்திகரமான வகையில் சபையில் கேள்வி அறிவித்தல் விலை மனுக்கள் முன்வைக்கப்படாமையினால் மேற்படி வெளிநாட்டு குடிபான தவறணைகளை மீண்டும் குத்தகைக்கு விட மதுவரிகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய அறிவித்தல் மற்றும் நிபந்தனைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983ஆம் ஆண்டிலும் அதற்குப் பிந்திய கால எல்லைக்குள் இங்கு காணப்படும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபான தவறணைகள் ( தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) குத்தகைக்குக் கொடுத்தல், 2021 காலப்பகுதிக்குள் நிபந்தனைகளுக்கமைய வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் (தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) தனி நபருக்கான சில்லறை விற்பனைக் குத்தகை கொடுப்பனவுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2020ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள நேரம் வரை அம்பகமுவ பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. (அ) அனைத்துக் கேள்விப்பத்திரங்களும் ஏதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையான விண்ணப்பப்படிவமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நிரந்தர வைப்புப் பணமாக அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச் சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிராந்திய மேலதிக அரசாங்க அதிபரால்/ பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்வித் தாளில் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அசைவற்ற ஆதனங்களின் அத்தாட்சிப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் போது வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் நிபந்தனைகளுக்குட்டபட்டவாறாக கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கேள்விதாரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

i. கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

ii. பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்விப்பத்திரமானது கையொப்பமிடும் சாட்சிகளது தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

iii. கேள்விப் பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விதாரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

iv. சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர்கள் தமது தேசிய அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

03. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச் சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது மேல்மூலையில் தவறணைக்கான பெயரையும், இலக்கத்தையும் குறிப்பிட்டு அம்பகமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பெட்டியில் கேள்வி மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் நேரம் முடிவடைவற்கு முன்னர் வைப்புச் செய்யப்பட வேண்டும். தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவுத் தபாலில் அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்கு கேள்விதாரர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

05. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ மறுக்கவோ பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர்கள் விற்பனைத் தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் அம்பகமுவ பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட மூன்று மாத விற்பனைக்குக் குறையாத பிணைப்பணம் அம்பகமுவ பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப் பணம் "பிரதேச செயலாளர்" என்ற பெயரில் கினிகத்தேனை மக்கள் வங்கியில் நிரந்தர சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப் பணமானது பணம், காசோலை அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்பட்ட பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்பட வேண்டும். தேவையான முத்திரைகள் செலுத்தி குத்தகைக்காரர்கள் நிபந்தனைகளினதும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைக் கட்டணம் மாதாந்தக் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

09. மேற்படி திகதியில் குத்தகைத் தவறணைகள் கொடுக்கப்படாத பட்சத்தில் 2020.11.10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீள்விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்குக் கொடுப்பது சம்பந்தமாக முடிவான தீர்மானம் பிரதேச செயலாளருடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் அம்பகமுவ கோரளை பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

**வெளிநாட்டு மதுபான தவறணைகள்**

| *இலக்கமும் தவறணையின் பெயர்* | *தவறணை நிறுவப் பட வேண்டிய இடம்* | *கேள்விப்பத்திரம் பெறப்படும் கால எல்லை* | *பிணைப்பணம் ரூ. ச.* |
|---|---|---|---|
| 1. நோர்வூட் | நோர்வூட் நகர எல்லையில் 3 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2020.11.10 மு.ப.10.30 | 5,000.00 |
| 2. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 4 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2020.11.10 மு.ப.10.30 | 5,000.00 |
| 3. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 5 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2020.11.10 மு.ப.10.30 | 5,000.00 |

சிதாரா ருவினி கமகே,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளை,
2020, செத்தெம்பர் 21.

10- 372

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

ஜே ஏ எஃப் மரிக்கார் மற்றும் எஃப் எம் எம் ஃபெரோஸ்
கணக்கு இல. : 0032 5003 3868

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2018.11.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.01.04 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2018.12.31ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதினைந்து கோடியே எழுபத்தி ஏழு இலட்சத்து முப்பத்தி ஐயாயிரத்தி முந்நூற்றி ஏழு ரூபா ஐம்பத்தி ஏழு சதம் (ரூபா 15,77,35,307.57) 2018, நவெம்பர் 07 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பதின்நான்கு கோடியே எழுபத்தி நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூபா 14,74,50,000.00) at an interest rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு வீதம் (2%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டப்ளியூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2020.11.11 ஆந் திகதி பி.ப.2.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளே பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பத்துவில் கண்டி மா நகர சபை எல்லைகளுக்குள் பிட்டகந்த – 250 கிராம அலுவலர் பிரிவின் மாஹாய்யாவையில் அமைந்த சீ. டீ. எல். பெர்ணாண்டோ மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 05 ஐ ஏற்ற "கிரில்லகொடவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. டீ. ஆதிஹெட்டி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, மே 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 6013 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஃப். மாப்பலகம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3192 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 மற்றும் வீதிப் பிரவேசம்; கிழக்கு : வீதி மற்றும் கட்டுகஸ்தொட்டை வீதி வரிமதிப்பீட்டு இல. 249 ஐ ஏற்ற வளவுகள் ; தெற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஃப். மாப்பலகம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 4233 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 4 மற்றும் மேற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஃப். மாப்பலகம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3192 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 2 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் : ஒரு றூட் மற்றும் முப்பது பேர்ச் (0ஏ. 1றூ. 30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6013 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் A 583 / 130 (வேறு விபரங்கள் பந்தி) இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதே வரைபடத்தில் காட்டப்பட்ட பிரதான வீதியிலிருந்து வரும் பாதைக்கான மார்க்க உரிமைகளுடனானது.

கூறப்பட்ட லொட் 1 கீழே காட்டப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற் கூறப்பட்ட மாஹய்யாவையில் அமைந்த "கிரில்லகொட வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஃப். மாப்பலகம என்பவரால் தயாரிக்கப்பட்ட 1966, யூன் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 4233 (293 என தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது) எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 மற்றும் 3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு: திருமதி எஸ். டபிள்யூ. ஆர். டயஸ் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஃப். மாப்பலகம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3192 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 மற்றும் வீதிப் பிரவேசம்; வடகிழக்கு : இல.4233 எனும் வரைபடத்தில் A, B, C, D என குறிப்பிடப்பட்ட வீதி ; தென்கிழக்கு : திரு. எச். எல். ரத்வத்தைக்கு சொந்தமான சொத்து ; தெற்கு : இல. 4233 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் 4, 5, 6 மற்றும் 7 மற்றும்; மேற்கு : டொக்டர் சீவலி ரத்வத்தை என்பவருக்கு ஒதுக்கப்பட்ட இல. 3192 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 2, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் : ஒரு றூட் மற்றும் இருபத்தி எட்டு தசம் ஏழு ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 28.75பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4233 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டிக் காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் A 583/141 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. டீ. ஆதிஹெட்டி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1987, நவெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 1018 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட இக் காணி லொட்கள் 1 – 4 எனவும் அழைக்கப்படும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 426/1

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

செவன்டீன் சீ சிலோன் ( பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல. : 0113 1000 0509

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2017.09.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2018.02.16 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2018.03.02ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஜலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே அறுபத்தி ஏழு இலட்சத்து எழுபத்தி ஒன்பதினாயிரத்து எண்ணூற்றி ஏழு ரூபா தொண்ணூற்றி நான்கு சதம் (ரூபா 2,67,79,807.94) 2017, செத்தெம்பர் 04 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (15,000,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஆறு வீதம் (16%) மேலும் தொண்ணூற்றி இரண்டு இலட்சம் ரூபா (ரூபா 92,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.11.11 ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பியகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பியகம பிரதேச சபை எல்லைகளுக்குள் பாஹால பியன்வில கிராம அலுவலர் பிரிவின் இஹல பியன்வில மற்றும் பஹல பியன்விலவில் அமைந்த மங்கட வீதி, வரிமதிப்பீட்டு இல. 61/ 5 ஐ ஏற்ற "தம்புகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் வீ எஃப் ஜே. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 9027 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடகிழக்கு : எச் எசிலின் பெரேரா உரிமம் கோரும் அதே காணியின் ஒரு பகுதி ; தென்கிழக்கு : அதே காணியின் ஒரு பகுதி; தென் மேற்கு : அதே காணியின் ஒரு பகுதி மற்றும் வடமேற்கு : லொட் 2 (12 அடி அகல வீதி), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச்சுகள் (0ஏ.0றூ.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 9027 எனும் வரைப்படத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் என் 308/08 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2007, மாச்சு 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 2750 எனும் வரைபடத்திற்கு அமைவாக அண்மைய நிலஅளவீட்டிற்கு அமைய கீழ்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இஹல பியன்வில மற்றும் பாஹால பியன் விலவில் அமைந்த மங்கட வீதி, வரிமதிப்பீட்டு இல. 61/ 5ஐ ஏற்ற "தம்புகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2017, மாச்சு 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 2750 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : வடகிழக்கு: எச். எசிலின் பெரேரா உரிமம் கோரும் அதே காணியின் ஒரு பகுதி ; தென்கிழக்கு : அதே காணியின் ஒரு பகுதி ; தென் மேற்கு : அதே காணியின் ஒரு பகுதி மற்றும் வடமேற்கு : இல. 9027 எனும் வரைபடத்தின் லொட் 2 (12 அடிகள் அகல வீதி), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச்சுகள் (0ஏ.0றூ.30பே.) அல்லது 0.0759 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2750 எனும் வரைப்படத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் N 308/08 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 426/2

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஏ டபிள்யூ ஈ ஐ கே அபேருவன்
கணக்கு இல. : 0085 5000 8115

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.02.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.05.10 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.05.02ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐம்பத்தி ஏழு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரத்து தொண்ணூற்றி நான்கு ரூபா பத்து சதம் (ரூபா 57,75,094.10) 2019, சனவரி 24 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பத்தி ஆறு இலட்சத்து ஐந்தாயிரத்து எழுநூற்று அறுபது ரூபா அறுபத்தி ஏழு சதம் (ரூபா 56,05,760.67) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2020.11.11 ஆந் திகதி மு.ப.10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கிழக்கு கோரலே பெலிஸ்பத்துவையின் மெததும்பர பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் சியம்பலாகஸ்தென்ன கிராம அலுவலர் பிரிவின் ரபுக்வெள்ளயில் அமைந்த "பஹுருகந்த வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். எம். பீ. சமரகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, நவெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 764 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இல. 181/02/2005 எனும் வரைபடத்தின் லொட் 1 ; கிழக்கு : கண்டி முதல் மஹியங்கனை வரையான வீதி; தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ. பியதாச என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 181/02/2005 எனும் வரைபடத்தின் லொட் 4 மற்றும் மேற்கு: இல. 181/02/2005 எனும் வரைபடத்தின் லொட் 3 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 10.3பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 764 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட இல. 181/02/2005 எனும் வரைபடத்தின் லொட் 2 இன் மீள் அளவீடான கூறப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது:

கூறப்பட்ட ரபுக்வெள்ளயில் அமைந்த "பஹுருகந்த வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ. பியதாச என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, சனவரி 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 181/02/2005 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இங்கு லொட் 1 ; கிழக்கு : கண்டி முதல் மஹியங்கனை வரையான வீதி; தெற்கு: இங்கு லொட் 4 மற்றும் ; மேற்கு : இங்கு லொட் 3 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 10.3பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல.181/02/2005 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் S 203/63 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 426/3

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

பெரக்கா ஸ்ட்டீல்ஸ்
கணக்கு இல. : 0170 1000 1137

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.09.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.10.01ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.11.17ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்"

(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே நாற்பத்தி ஐந்து இலட்சத்து ஐம்பதினாயிரத்து இரு நூற்று நாற்பத்தி இரண்டு ரூபா எழுபத்தி மூன்று சதம் (ரூபா 14,550,242.73) 2019, செத்தெம்பர் 17 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே முப்பத்தி ஏழு இலட்சத்து அறுபத்தி ஒன்பதினாயிரத்து எண்ணூற்று பதின் ஏழு ரூபா அறுபத்தி ஆறு சதம் (ரூபா 13,769,817.66) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு தசம் இரண்டு ஐந்து வீதம் (16.25%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கம் 3727 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.11.23 ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளே மெத பத்து சீதாவக்கை (ஹங்வெல்லை உப அலுவலகம்) பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் ஹங்வெல்லை இல. 432/ B, கிராம அலுவலர் பிரிவின் ஹங்வெல்லையில் அமைந்த சென்ட்றல் கொலேஜ் வீதி, வரிமதிப்பீட்டு இல. 11/16 ஐ ஏற்ற “தச்சவத்த” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். களுத்தந்திரி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, செத்தெம்பர் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 799 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: லொட் 1 ; கிழக்கு : லொட் 03; தெற்கு: எம். டபிள்யு. டீ. டீ. ஞனதிலக்க என்பவரின் தச்சவத்த மற்றும்; மேற்கு: வித்தியால மாவத்தை, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி மூன்று தசம் ஐந்து இரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 23.52பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 799 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் B 203/48 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட இல. 799 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 காட்டப்பட்ட வீதிக்காக ஒதுக்கப்பட்டதன் ஊடாகவும் மற்றும் அதன் மீதும் அதன் கீழும் பிரவேசிப்பதற்கான மற்றும் மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-427

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எச் எல் ஏ மதுஷங்க
கணக்கு இல. : 1029 5709 8940

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.11.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.02.20ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2020.02.12ஆந் திகதிய “திவயின” (Divaina), “ஐலண்ட்” (Island), “தினக்குரல்” (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எண்பத்தி நான்கு இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரத்து நூற்று பதினேழு ரூபா பதினாறு சதம் (ரூபா 84,32,117.16) 2019, ஒற்றோபர் 30 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்தி எட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்று நாற்பத்தி இரண்டு ரூபா முப்பத்திரண்டு சதம் (ரூபா 78,58,142.32) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2678 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.11.03 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், வடக்கு பிட்டிகல் கோரலே முன்னேஸ்வரம் பத்துவின் சிலாபம் பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் மாதம்பே பிரதேச செயலாளர் பிரிவின் கலஹிட்டியாவ கிராம அலுவலர் பிரிவின் கருக்குவ கிராமத்தில் அமைந்த “கருக்குவ வளவ்வ எஸ்டேட்” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். ஏ பொன்சேக்கா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, யூலை 07ஆந் திகதியிடப்பட்ட இல. 0084 E எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட

அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு பிரதேச சபை வீதி (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்தின் லொட் 108) ;கிழக்கிற்கு பிரதேச சபை வீதி (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்தின் லொட் 108), தெற்கிற்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவால் தயாரிக்கப்பட்ட இல. 239B எனும் வரைபடத்தின் லொட்கள் 4 மற்றும் 5 மற்றும் மேற்கிற்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்தின் லொட் 10, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 20.1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 0084 E எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட இலக்கம் 0084 E எனும் வரைப்படத்தில் காட்டப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

கூறப்பட்ட கருக்குவ கிராமத்தில் அமைந்த "கருக்குவ வளவ்வ எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992, யூன் 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 239B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 9 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு: லொட் 108; கிழக்கிற்கு: லொட் 108 ; தெற்கிற்கு: லொட்கள் 4 மற்றும் 5 மற்றும் மேற்கிற்கு : லொட் 10, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 20.1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்திற்கு அமைவாக சிலாபம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் F 85/109 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட இலக்கம் 239 B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 108 ஊடாகவும் அதன் மீதும் மேலும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளும் மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய அனைத்து உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 428

## பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீ.எல்.சீ. இனால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆதனம் பின்வரும் திகதியில் மற்றும் நேரத்தில் அவ்வாதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டத்தில் நுவரகம் பலாத்தவில், நுவரகம் பலாத்த கிழக்கின் பிரதேச செயலாளர் பிரிவில் அநுராதபுரம் 251 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அநுராதபுர மாநகர சபை எல்லைகளில் அநுராதபுரம்,புதிய பட்டினத்தில் அமைந்துள்ளதும் ( நில அளவையாளர் தலைமையதிபதியின் சார்பில் நிலஅளவைகள் காண்காணிப்பாளர் திரு. ஜீ.எம். அபேசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001.08.01 ஆந் திகதி A3 ஆம் இலக்க இறுதி நகர வரைபடத்தில் 01 ஆம் இலக்க குறைநிரப்பியில் 117 ஆம் இலக்கத் தாளில் காணித்துண்டம் 865 இன் மீள் நிலஅளவையாகவுள்ளதும்) உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பிரியந்த சமரதுங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.06.29 ஆந்திகதிய 2015/247 ஆம்இலக்கவரைபடத்தில்காணித்துண்டம் இல. 1 எனக் குறித்துக் காட்டப்பட்டதும், "கொம்பிச்சன் குளம ஹேன" அரச காணி என அழைக்கப்படுவதுமான அக்காணித்துண்டு அடங்கலும், அதன் மீதுள்ள கட்டிடங்கள், மரங்ள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சேர்த்து.

( காணியின் விஸ்தீரணம்: 00ஏ.00றூ.23.83பே.)

2020, ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி பி.ப.1.00 மணிக்கு

